## TB Alert டைப் பற்றி

**TB Alert** என்பது காசநோய் பற்றி உலகளவில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் யூ.கே.வில் உள்ள தொண்டு நிறுவனமாகும். நோயாளிகளுக்கு காசநோய் பற்றிய தகவல்களைக் கொடுத்து என்.ஹெச்.எஸ்.ஸிற்கு ஆதரவு அளிக்கிறது. யூ.கே. விலும் வளர்ந்து வரும் நாடுகளிலும் நோயாளிகள் சரியான தகவல்களும் சிகிச்சையும் பெற வேண்டும் என்பதற்கான செயல்திட்டங்களுக்கு நாங்கள் ஆதரவு அளிக்கிறோம். உங்கள் ஆதரவுடன் காசநோய் பற்றிய விழிப்புணர்வை உலகம் முழுவதும் உண்டாக்கி நிறைய உயிர்களை எங்களால் காப்பாற்ற முடியும்.

## TB Alert டைப் பற்றி மேலும் விவரங்கள்

உங்களுக்கு காசநோய் இருந்து, காசநோயால் பாதிக்கப்பட்டவர்களிடம் இருந்து இந்த நோயைப் பற்றி கூடுதல் விவரங்களை அறிய விரும்பினால் Paul Mayho (இரண்டாம் பதிப்பு) எழுதிய The Tuberculosis Survival Handbook என்ற புத்தகத்தைப் படியுங்கள். இந்த புத்தகத்தின் விலை £14.95. இப்புத்தகம் உள்ளூர் புத்தகக் கடைகளிலும், Gazelle Book Services யிலும், www.amazon.co.uk என்கிற இணையதளத்திலும் கிடைக்கும். இதனை நேரடியாக வெளியீட்டாளரிடமிருந்தும் பெற்றுக் கொள்ளலாம், Merit Publishing International -யின் இணையதள முகவரி www.meritpublishing.com. மின்னஞ்சல் அனுப்ப வேண்டிய முகவரி merituk@aol.com. இந்த புத்தகத்தை வாங்குவதற்குப் பதிவு செய்ய வேண்டிய குறிப்பு எண் ISBN 1 873413 14 9.

இணையதளம்: www.tbsurvivalproject.org

காசநோயிலிருந்து உங்கள் குடும்பத்தினருக்கும் நண்பர்களுக்கும் பாதுகாப்பு அளியுங்கள் - அனைத்து காசநோய் மருந்துகளையும் எடுத்து கொள்ளுங்கள்

**உங்களுக்கு** உதவி செய்யவும் அறிவுரை வழங்கவும் காசநோய் செவிலியர் இருக்கிறார் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். உங்களுக்கு செய்யப்பட்ட சிகிச்சை திருப்திகரமாக இல்லையென்றாலும் நீங்கள் எடுத்துக் கொள்ள வேண்டிய மருந்து சம்பந்தமாக ஏற்படும் சந்தேகங்களையும் உங்களுடைய டி.பி. செவிலியரைத் தொடர்புக் கொண்டு கேளுங்கள்.

உங்கள் காசநோய் செவிலியர் பெயர்: ______________________

உங்கள் மருத்துவர் பெயர்: ______________________

தொடர்புக் கொள்ள வேண்டிய எண்: ______________________

மின்னஞ்சல்: ______________________

**TB Alert** என்பது காசநோய் பற்றி உலகளவில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் யூ.கே.வில் உள்ள தொண்டு நிறுவனம். யூ.கே.விலும் வளர்ந்து வரும் நாடுகளிலும் நோயாளிகள் சரியான தகவல்களும் சிகிச்சையும் பெற வேண்டும் என்பதற்கான செயல்திட்டங்களுக்கு நாங்கள் ஆதரவு அளிக்கிறோம். உங்கள் ஆதரவுடன் காசநோய் பற்றிய விழி ப்புணர்வை உலகம் முழுவதும் உண்டாக்கி நிறைய உயிர்களை எங்களால் காப்பாற்ற முடியும்.

**TB Alert,**
Community Base,
113 Queens Road,
Brighton BN1 3XG
தொலைபேசி: 01273 234030

மேலும் விவரங்களுக்கு அல்லது இந்த பிரசுரத்தின் பிரதிகளைப் பெறுவதற்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண் 01273 234 770 (அலுவலக நேரத்தில் மட்டும்).

டி.பி.அலெர்ட்டிற்கு நன்கொடை வழங்க அல்லது தொண்டு செய்ய விரும்புபவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண் 01273 234 784 (அலுவலக நேரத்தில் மட்டும்).

அல்லது www.tbalert.org என்கிற இணையதளத்தைப் பாருங்கள

இந்தப் பிரசுரத்தில் காசநோய் மற்றும் ஹெச்.ஐ.வி. பரிசோதனை மற்றும் சிகிச்சை சம்பந்தமாகக் கொடுக்கப்பட்டுள்ளத் தகவல்கள் உங்களுக்கு இவற்றைப் பற்றிய பொதுவான தகவல்களை அளித்திருக்கும். நோயாளிகளின் நலனில் அக்கறைக் கொண்டுள்ள மருத்துவர்களின் அறிவு, நிபுணத்துவம், திறமை ஆகியவற்றை இது ஈடு செய்யாது. பரிசோதனை மற்றும் சிகிச்சை சம்பந்தமான சந்தேகங்களை உடல் நல பாதுகாப்பு நிபுணர்களிடம் கேட்டுக் கொள்ள வேண்டும்.

இது வட மேற்கு லண்டன் டி.பி. நெட்வொர்க்கால் செய்யப்பட்டது.

இது இங்கிலாந்தில் பதிவு செய்யப்பட்ட, உத்திரவாதங்கள் மட்டுப்படுத்தப்பட்ட ஒரு நிறுவனம் இதன் பதிவு எண். 3606528 பதிவு தருமஸ்தாபன எண். 1071886 வடிவமைப்பு: வொர்க்சாங், லண்டன் 020 8352 8300

# காசநோயை அடையாளம் காணல் மற்றும் பரிசோதனை மேற்கொள்ளல்



## காசநோய் என்றால் என்ன?

காசநோய் என்பது ஒருவகை பாக்டீரியா மூலமாகப் பரவும் நோய். இது பரவலாக நுரையீரலை பாதிக்கும். ஆனால் இவை உடலின் எந்த பகுதியையும் பாதிக்கலாம். ஆறு மாதங்களுக்கான மருந்தினை எடுத்துக் கொண்டாலே காசநோயை குணப்படுத்திவிடலாம். நுரையீரல் அல்லது தொண்டையை பாதிக்கும் காசநோய்தான் பாதிப்பை ஏற்படுத்தக் கூடியது. சரியான மருந்தை எடுத்துக் கொண்டால் இரண்டு வாரங்களிலேயே பல பேருக்கு இதனை குணப்படுத்திவிடலாம்.

## இது எப்படி வருகிறது?

நுரையீரல் காசநோயால் பாதிக்கப்பட்டவர்கள் இருமினாலோ தும்மினாலோ கிருமிகள் காற்றில் பரவுகிறது. அதனை மற்றவர்கள் சுவாசிக்க நேர்கிறது. இதனால் காசநோய் வருகிறது. காசநோயினால் பாதிக்கப்பட்டவர்களிடம் அதிக நேரம் செலவிடுபவர்களுக்கும் (இவர்கள் அநேகமாக வாழ்க்கைத் துணையாகவோ, குடும்பத்தைச் சேர்ந்த மற்றவர்களாகவோ, சில நேரம் உடன் பணிபுரிபவர்களாகவோ இருப்பர்) இந்நோய் வர அதிக வாய்ப்புள்ளது. பேருந்து அல்லது இரயில் போன்றவற்றில் காசநோயால் பாதிக்கப்பட்டவர்களுடன் பயணம் செய்வதனால் காசநோய் பரவ வாய்ப்பில்லை. ஆயினும் காசநோயால் பாதிக்கப்பட்டவர்களுடன் அதிக நேரம் செலவிடுவதால் காச நோய் பரவுகிறது. காசநோய் உமிழ்வதனாலோ, பொருட்களைப் பகிர்ந்து கொள்வதனாலோ பரவுவதில்லை.

## அடையாளம் காணல் மற்றும் பரிசோதனை மேற்கொள்ளல் என்றால் என்ன?

காசநோயினால் பாதிக்கப்பட்டவர்களுடன் தொடர்பில் இருக்கையில் அவர்கள் உங்கள் அருகில் இருமிக் கொண்டோ, தும்மிக் கொண்டோ இருந்தால் உங்களையும் காசநோய் தொற்றிக் கொண்டுள்ளதா அல்லது காசநோய் ஏற்படுவதற்கான அறிகுறிகள் இருக்கிறதா என்பதைத் தெரிந்து கொள்ள பரிசோதனை செய்து கொள்வது நல்லது. இது மிகவும் அவசியமானது. ஏனென்றால் அப்பொழுது தான் உங்களுக்குத் தேவையான ஆலோசனையும் சிகிச்சையும் அளிக்கப்படும். தேவைப்பட்டால், ஆரம்ப நிலையிலேயே சிகிச்சை அளிக்கப்படுவதால் காசநோய் மேலும் பரவாமல் தடுக்க முடியும்.

## பரிசோதனை:

காசநோய் இருப்பதற்கான அறிகுறிகள் இருக்கிறதா, ஏற்கனவே பி.சி.ஜி. தடுப்பு மருந்தை எடுத்துக் கொண்டுள்ளீர்களா (இது காசநோய் வராமல் பாதுகாக்கும்), காசநோய் உங்களைத் தொற்றியிருந்தும் எந்த அறிகுறியும் இல்லாமல் இருக்கிறதா என்பதைக் கண்டுபிடிப்பதற்காக செய்யப்படுகிறது.
ஒன்று அல்லது ஒன்றுக்கும் மேற்பட்ட பரிசோதனைகள் உங்களுக்கு செய்யப்படும்:

- மாண்டக்ஸ் பரிசோதனை என்னும் சரும பரிசோதனை. சில நேரம் இந்தப் பரிசோதனை 6-8 வாரங்கள் வரைத் திரும்ப திரும்ப செய்யப்பட வேண்டும்
- இரத்தப் பரிசோதனை
- மார்பு X-ray

இந்தப் பரிசோதனைகளின் முடிவுகள் உங்களுக்கு ஏற்ற ஆலோசனைகளையும் சிகிச்சையையும் வழங்குவதற்கு உதவியாக இருக்கும்.

ஒரே குடும்பத்தை அல்லது குழுவை சேர்ந்த நபர்களுக்கு ஒரே மாதிரி சிகிச்சை வழங்கப்படவில்லையெனில் ஆச்சரியப்பட தேவையில்லை.

## அறிகுறிகள்:

- மருந்து சாப்பிட்டும் மூன்று வாரங்களுக்குத் தொடர்ந்து இருமல் இருத்தல்
- காய்ச்சல்
- படுக்கையை மாற்ற வேண்டிய அளவுக்கு இரவில் வேர்வை அதிகமாக இருத்தல்
- காரணம் இல்லாமல் எடை குறைதல
- களைப்படைதல் (சக்தி குறைதல் அல்லது அதிக அசதி)
- சு ரப்பி வீக்கம்
- பசியின்மை
- இருமும் போது இரத்தம் வருதல் (இது மிகவும் அரிதாக நிகழ்வது, அப்படி நிகழ்ந்தால் உடனடியாக மருத்துவ ஆலோசனை பெற வேண்டியது அவசியம்)

இந்த அனைத்து அறிகுறிகளும் வேறு பிரச்னைகளுக்கான அடையாளங்களாக இருக்கலாம், ஆனால் இவற்றில் மூன்று அல்லது மூன்றுக்கு மேற்பட்ட அறிகுறிகள் இருந்தால் நீங்கள் உள்ளூர் மருத்துவமனையில் உள்ள மருத்துவரையோ செவிலியரையோ சந்தித்துப் பேச வேண்டும்.

## பரவக் கூடிய வகையில் காசநோயால் பாதிக்கப்பட்டவர்களுடன் நான் நெருங்கிய தொடர்பு வைத்திருந்தேன். இப்போது நான் என்ன செய்வது?

பரவக் கூடிய வகையில் காசநோயால் பாதிக்கப்பட்டவர்களுடன் நீங்கள் நெருங்கிய தொடர்பில் இருந்திருந்தால், உள்ளூர் உடல் நல சேவை மையத்தை அணுகுங்கள். அவர்கள் உங்கள் பரிசோதனைக்காக ஏற்பாடு செய்வார்கள். நீங்கள் அவர்களைத் தொடர்புக் கொள்ளாமல் கவலைப்பட்டால், உள்ளூர் மார்பு சம்பந்தமான சிகிச்சையளிக்கும் மருத்துவமனையையோ ஜி.பி.யையோ அணுகுங்கள். அவசியம் இருந்தால் அவர்கள் சந்திப்பிற்கு ஏற்பாடு செய்வார்கள்.

## நான் எப்போதும் போல செயல்படலாமா?

உங்களது தினசரி செயல்பாட்டில் எந்த மாற்றமும் செய்யத் தேவையில்லை. உங்களுக்கு நோய் தொற்று ஏற்படும் சூழ்நிலையில் இருந்திருந்தாலும் உங்களுக்கு காசநோய் வருவதற்கும் உங்கள் மூலமாக மற்றவர்களுக்கு வருவதற்கும் வாய்ப்புகள் குறைவே. எனவே, தொடர்ச்சியாக சில வாரங்களுக்கு இருமல் இருந்தாலோ உடல் நிலை சரியில்லாமல் இருந்தாலோ ஒழிய அலுவலகம் அல்லது பள்ளிக்கு விடுமுறை எடுக்கத் தேவையில்லை. உங்களுக்கு காசநோய் இருக்கிறது என்று சந்தேகம் வந்தால் நிபுணர்கள் ஆலோசனை வழங்குவார்கள்.